செய்தி வெளியீடு எண்: 006 நாள்: 02.01.2018

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (2.1.2018) தலைமைச் செயலகத்தில், 2017–ஆம் ஆண்டு நடைபெற்ற 22–வது ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டி, 7–வது உலக அளவிலான உயரம் குன்றிய மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டி மற்றும் 9–வது ஆசிய வயது பிரிவினருக்கான சாம்பியன்ஷிப் போட்டி ஆகிய போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 9 விளையாட்டு வீரர்கள் மற்றும் அவர்களது பயிற்சியாளர்கள் 5 பேருக்கு முறையே உயரிய ஊக்கத்தொகை மற்றும் ஊக்கத் தொகையாக 99 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, பன்னாட்டு அளவிலும் அகில இந்திய அளவிலும், நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகை சூடும் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், திறமை மிக்க விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு உயரிய பயிற்சி அளித்தல், உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு மையங்கள் அமைத்தல், சிறந்த விளையாட்டு வீரர்கள் மேலும் பல சாதனைகள் புரிய உதவித் தொகை வழங்குதல், பதக்கம் வெல்லும் வீரர்களின் பயிற்றுநர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கும் ஊக்கத் தொகை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் 2017–ஆம் ஆண்டு ஜுலை 5 முதல் 9 வரை நடைபெற்ற 22–வது ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் 5000 மீட்டர் மற்றும் 10,000 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் தங்கப் பதக்கங்கள் வென்ற திரு. ஜி. லட்சுமணன் அவர்களுக்கு 20 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், 4 x 400 மீட்டர் தொடர் ஓட்டப் பந்தயத்தில் தங்கப் பதக்கமும் 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெள்ளிப் பதக்கமும் வென்ற திரு.எஸ்.ஆரோக்கிய ராஜிவ் அவர்களுக்கு 15 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், 4 x 400 மீட்டர் தொடர் ஓட்டப் பந்தய தகுதிச்சுற்று (Heats) போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற திரு. ஆர். மோகன் குமார் அவர்களுக்கு 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையும்;

கனடா நாட்டில் 4.8.2017 முதல் 13.8.2017 வரை நடைபெற்ற 7–வது உலக அளவிலான உயரம் குன்றிய மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளில் ஈட்டி எறிதல், குண்டு எறிதல் மற்றும் வட்டு எறிதல் போட்டிகளில் 3 தங்கப் பதக்கங்கள் வென்ற திரு.கே.கணேசன் அவர்களுக்கு 15 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், ஈட்டி

எறிதல் போட்டியில் 1 தங்கப் பதக்கம், குண்டு எறிதல் மற்றும் வட்டு எறிதல் போட்டிகளில் தலா ஒரு வெள்ளிப் பதக்கம் வீதம் 2 வெள்ளிப் பதக்கங்கள் வென்ற திரு.சி. மனோஜ் அவர்களுக்கு 11 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், ஈட்டி எறிதல் போட்டியில் 1 தங்கப் பதக்கம் வென்ற திரு.அ. செல்வராஜ் அவர்களுக்கு 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையும் மற்றும் இவர்களின் பயிற்சியாளர்கள் திரு. ரஞ்சித்குமார் மற்றும் திரு. சுந்தர் ஆகியோருக்கு 4 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளையும்;

உஸ்பெக்கிஸ்தான் நாட்டின் தாஷ்கண்ட் நகரில் 2017–ஆம் ஆண்டு செப்டம்பர் 8 முதல் 16 வரை நடைபெற்ற 9–வது ஆசிய வயதுப் பிரிவினருக்கான சாம்பியன்ஷிப் போட்டியில், நீச்சல் பிரிவில் 1 தங்கம், 1 வெள்ளி மற்றும் 2 வெண்கலம், என மொத்தம் 4 பதக்கங்கள் வென்ற செல்வன் பி. விக்காஸ்க்கு 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையும், 1 தங்கப் பதக்கம் வென்ற செல்வன் வி. லெனார்ட்க்கு 4 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், 1 வெள்ளிப் பதக்கம் வென்ற செல்வன் சு. தனுஷ்க்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையும் மற்றும் இவர்களின் பயிற்சியாளர்கள் திருமதி ஏ. சரோஜினி தேவி, திரு.ஏ. கர்ணன் மற்றும் திரு.வி. வீரபத்ரன் ஆகியோருக்கு 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளையும்;

என மொத்தம் 99 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை பல்வேறு சர்வதேச போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 9 விளையாட்டு வீரர்கள் மற்றும் 5 பயிற்சியாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று, முறையே உயரிய ஊக்கத்தொகை மற்றும் ஊக்கத்தொகையாக வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, தலைமைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு. க. சண்முகம், இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு. தீரஜ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திருமதி ரீட்டா உறரீஷ் தக்கர், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 02.01.2018**